Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 103 | வெள்ளிக்கிழமை Friday | 13.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

## இந்தியாவின் உற்பத்தி வளர்ச்சியை விட

# தமிழகத்தின் உற்பத்தி வளர்ச்சி 3 மடங்கு அதிகம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு




சென்னை கிண்டியில் 'CONVERSION CONCLAVE 2026' மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

* திராவிட மாடல் என்றால் வளர்ச்சிக்கான மாடல், மக்கள் வளர்ச்சிக்கான மாடல்.

*தமிழகத்தின் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாதவர்களுக்கான பதில் இந்த மாநாடு.

* 'CONVERSION CONCLAVE2026' மாநாட்டில் மட்டும் 52 நிறுவனங்களின் திறப்பு விழா நடந்துள்ளது.

* தொழில்துறையில் செய்த சாதனைகளை நாங்களே மீண்டும் ஆட்சிக்கு வந்து முறியடிப்போம்.

* தொழில் நிறுவனங்களின் நம்பிக்கைக்குரிய மாநிலமாகதமிழ்நாடு உள்ளது.

* ஒப்பந்தங்கள் செயலாக்கம் பெறுவதை பார்த்து பார்த்து உறுதி செய்கிறோம்.

* முதலீடுகள் செயலாக்க மாநாடு என்பது இந்தியாவில் எங்குமே இல்லாத ஒன்றை நடத்தி வருகிறோம்.

*தமிழ்நாடு தான் முதலீட்டாளர்களின் முதல் முகவரி என புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

*இந்தியாவின் எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு மட்டும் 41 சதவீதமாக உள்ளது.

* முதலீடுகள் செயலாக்க மாநாடு என்பது இந்தியாவில் எங்கும் இல்லாத ஒன்று.

* அனைத்து தொழில்துறையினருக்கும் நம்பிக்கை அளிக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

*தமிழ்நாடு தான் முதலீட்டாளர்களின் முதல் முகவரி என புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

* கடந்த ஆண்டு இந்தியாவின் உற்பத்தி திறன் 4.5 சதவீதமாக உள்ள நிலையில் தமிழ்நாட்டில் 14.7 சதவீதமாக உள்ளது.

* இந்தியாவின் உற்பத்தி வளர்ச்சியை விட தமிழகத்தின் உற்பத்தி வளர்ச்சி 3 மடங்கு அதிகம். இவ்வாறு அவர் கூறினார்.

ரூ.31,934 கோடி முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களை முதல்வர் ஸ்டாலின்(பிப். 12) தொடக்கி வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), ரூ. 36,968 கோடி முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ. 31,934 கோடி முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

மேலும், ரூ. 5,000 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில், 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இன்றையநாள்,அடிக்கல் நாட்டப்பட்ட மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்கள், ராமநாதபுரம், தூத்துக்குடி, திருச்சி, விழுப்புரம், தர்மபுரி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் பாரத் பயோடெக் நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க உள்ள உயிரியல் மற்றும் மருந்துகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா ஃபவுண்டேஷன் நிறுவனம், 7000 மாணவர்களுக்கு திறன்பயிற்சி மேற்கொள்ளும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கூறிய திட்டங்கள், பல்வேறு துறைகளில், மாநிலம் முழுவதும் நிறுவப்பட உள்ளது என்பதுதான் இன்றைய மாநாட்டின் சிறப்பம்சமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேலத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் நுழைவுச் சீட்டு இருந்தால் மட்டுமே அனுமதி



சேலம்: தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் கலந்து கொள்ளும் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம், சேலம் சீல்நாயக்கன்பட்டியில் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படவுள்ள நிலையில், அரசியல் களம்சூடுபிடித்துள்ளது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் தொடர்பான பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த நிலையில், தவெக தலைவரும் நடிகருமான விஜய், செப்டம்பர் 27-ந் தேதி கரூரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதில் ஏற்பட்ட கூட்டநெரிசலில்சிக்கி41 பேர் உயிரிழந்தனர். நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை அடுத்து,தவெகதலைவர் விஜய் தேர்தல் பிரச்சாரத்தில் தொய்வு ஏற்பட்டது.பின்னர்அவர் ஈரோட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். சேலத்தில் தவெக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம்நாளை நடைபெறுகிறது. இதில் அக் கட்சியின் தலைவர் விஜய் கலந்து கொள்கிறார். நிகழ்ச்சி நடைபெறும் சீல்நாயக்கன்பட்டியில் முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதனை தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் இன்று ஆய்வு செய்தார்.

அப்போது நிர்வாகிகள் மத்தியில் பேசிய புஸ்ஸி ஆனந்த்,"ஒவ்வொரு பகுதியிலும் அனுமதிக்கப்பட்டவர்களை தவிர்த்து, வேறு யாரையும் வாகனத்தில் அழைத்து வரக் கூடாது. அழைத்து வந்து, உள்ளே விடாவிட்டால், வந்தவர்களுக்கு மன உளைச்சல் ஏற்படும். இது தொடர்பாக அந்தந்த பகுதி நிர்வாகிகளிடம் தெளிவாக கூறிவிடவும்.

அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் அனைவரும் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு முன் கூடியே வந்து விடுங்கள். அதை விட்டு விட்டு அங்கே இங்கே என அலையக் கூடாது. ஒன்றிய நிர்வாகிகளிடம் தெரிவித்து விடுங்கள். அடையாள அட்டை இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்" என்று அறிவுறுத்தினார். இதனிடையே சேலம் மாநகர காவல் துணை ஆணையர் கேழ்கர் சுப்ரமணிய பாலசந்தரா, தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும் இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "நாளைக்கு 5000 பேருக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இங்கு வரும் நிர்வாகிகளுக்கு வாகனம் நிறுத்துவதற்கு தனியாக இடம் உள்ளது. அங்கு வாகனங்களை நிறுத்தி விட்டு தான், உள்ளே அவர்கள் வர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 5,000 பேருக்கு மட்டுமே அனுமதி உள்ளது; வேறு யாரையும் அனுமதிக்க மாட்டோம்.

எந்த பகுதியில் நிர்வாகிகளை விஜய் சந்திக்கிறாரோ, அந்த பகுதியில் மட்டுமே நிர்வாகிகள் அனுமதிக்கப்படுபவர்கள். அங்கும் பாதுகாப்பு பணியில் காவல் துறையினர் ஈடுபட இருக்கிறார்கள்" என்றார்.

## தே.மு.தி.க. கூட்டணி குறித்த அறிவிப்பு வெளியாகும் வரை அமைதியாக இருங்கள்: பிரேமலதா விஜயகாந்த் பேட்டி




கூட்டணி தொடர்பாக இரண்டு தரப்பிலும் தேமுதிக பேச்சுவார்த்தை நடத்துவதாக தவறான தகவலை பரப்ப வேண்டாம் என்றும், அறிவிப்பு வெளியாகும் கூலாக இருங்கள் என்றும் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்திருக்கிறார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் அந்த கட்சியின் சார்பில் கொடி நாள் கொண்டாடப்பட்டது. அங்கு அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட கொடிக் கம்பத்தில் தேமுதிகவின் கொடி ஏற்றப்பட்டு பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், பொருளாளர் எல்.கே சதீஷ் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்.

அத்துடன் தேமுதிக விருப்ப மனுக்கள் பெறுவதற்கு கொடுக்கப்பட்டிருந்த கால அவகாசம் இன்றுடன் நிறைவடைவதால் இறுதி நாளில் வாங்கிச்சென்ற தொண்டர்களுக்கு பிரேமலதா விஜயகாந்த் விருப்ப மனுக்களை வழங்கினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரேமலதா விஜயகாந்த்,"தமிழகம் முழுவதும் தேமுதிக சார்பில் இன்று கொடி நாள் கொண்டாடப்படுகிறது. விஜயகாந்த் பெயரில் வேட்புமனுக்களை நான், சுதீஷ் உள்ளிட்ட பலரும் வாங்கி இருக்கிறோம்" என்றார்.

அவரிடம் கூட்டணி தொடர்பாக, திமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆகிய இரு தரப்புகளிடமும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாவது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.


அதற்கு பதிலளித்த பிரேமலதா விஜயகாந்த், "நாங்கள் தேசிய ஜனநாயககூட்டணியில் இணைவது குறித்து பேச்சுவார்த்தைநடத்தினோமா என்று பாஜக மாநில செயலாளர் நயினார் நாகேந்திரன் மற்றும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இருவருமே பேட்டி கொடுத்து விட்டனர். அதே போன்று திமுக தரப்பில் அமைச்சர் எ.வ. வேலு பத்திரிகையாளர்களை சந்திக்கும் போது எங்களுடன் கூட்டணி குறித்து இதுவரைபேசப்படவில்லை என்பதை உறுதி செய்துள்ளார். ஆனாலும் ஊடகங்களுக்கு யாரோ நாங்கள் இரு தரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்துவதாக தவறான தகவல்களை கொடுக்கின்றனர்.

கூட்டணியைபொறுத்தவரைஎங்கள் கட்சிநிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் யாருடன் கூட்டணி வைக்கவிரும்புகிறார்களோ அவர்களுடன் தான் கூட்டணி வைப்போம். அதுவரை கூட்டணி தொடர்பான கேள்விகளை எழுப்பாமல் கூலாக (cool) இருங்கள். இதுவரை பொதுவாக தான் விருப்ப மனுக்கள் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. யார் எந்த தொகுதியில் போட்டியிடுவது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. கூட்டணி அமைந்தபிறகு,எத்தனை இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பது தெரிந்த பிறகு, யார் யார் எந்த தொகுதிகளில் போட்டியிடுவார்கள் என்பது குறித்து முடிவு செய்யப்படும்" என்று விளக்கமளித்தார்.

இதனிடையே, தேமுகவில் விருப்ப மனு பெறுவதற்கான அவகாசம் மேலும் 3 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சிதலைமைஅறிவித்துள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## பிப். 15ல் உருவாகிறது புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி



பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனைஒட்டியதென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக பிப். 15-ல் காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே பகுதிகளில் உருவாகக்கூடும்.

தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலகீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. பிப்.12-ல்தென்தமிழக கடலோர மாவட்டங்களில்ஓரிருஇடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

பிப். 13-ல் தேனி, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதரதமிழகம்,புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். பிப். 14-ல் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். வட தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.



அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (12.02.2026) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வடிவுள்ளமங்கை திருமண மண்டபத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா 2026 நிகழ்ச்சியினை துவக்கி வைத்து, சீர்வரிசைப்பொருட்களை வழங்கினார்.

# 15 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி ரேசன்கடை பணியாளர்கள் தேனி மண்டல இணைபதிவாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய தொடர் வேலை விலைக் கடை பணியாளருக்கு ஓய்வூதியம் வழங்குதல்,அத்தியாவசிய பொருட்களை சரியான எடையில் பொட்டலங்களாக வழங்கிட நடவடிக்கை மேற்- வரவேற்புரையாற்றினார்.நிர்வாக அமைப்புச் செயலாளர் ஜெயபிரகாஷ்,மாநிலச் செயலாளர்கள், காமாட்சி முருகேசன், பாண்டி, போராட்ட குழு தலைவர்



நிறுத்த போராட்டத்தில் ரேஷன் கடை பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தேனி மாவட்டம் பெரியகுளம் பகுதியில் உள்ள தேனி மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம் முன்பு ரேசன் கடைபணியாளர்கள் ஊதிய உயர்வு,பொது விநியோகத் திட்டத்திற்கான தனித்துறை உருவாக்குதல், ஒய்வு பெற்ற நியாய கொள்ளுதல் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.மாவட்ட தலைவர்மகாலிங்கம்,மாவட்ட துணைத்தலைவர் குருசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு தலைவர் அழகர்சாமி முன்னிலை வகித்தார்.மாவட்ட செயலாளர் அய்யனார் நாகேந்திரன்,பிரச்சார குழு தலைவர் சுப்பிரமணி ஆகியோர் ஆர்ப்பாட்ட உரைநிகழ்த்தினர். மாநில பொருளாளர் பொன். அமைதி சிறப்புரையாற்றினார்.மாவட்ட பொருளாளர் முத்துராமர் நன்றி உரையாற்றினார். சுமார் 400 க்கும் மேற்பட்ட நியாய விலை கடை பணியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் தென்காசி மாவட்டம் புளியங்குடி கிழக்கு கிளையின் சார்பாக

# தாருல் ஹுதா மதரசாவின் ஆண்டு நிறைவு நிகழ்ச்சி மற்றும் மார்க்க விளக்க கூட்டம் நடைபெற்றது



தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தென்காசிமாவட்டம் புளியங்குடி கிழக்கு கிளையின் சார்பாக 11/2/2026 புதன்கிழமை மாலை:5 மணி முதல் இரவு : 9 மணிவரை தாருல் ஹுதா மதரசாவின் ஆண்டு நிறைவு நிகழ்ச்சி மற்றும் மார்க்க விளக்க கூட்டம் நடைபெற்றது மாணவ மாணவியர்களுக்கான பரிசளிப்புடன் நடைபெற்ற நிகழ்ச்சியி ற்க்கு கிளை தலைவர் சையது இப்ராஹிம் தலைமை தாங்கினார்

மாவட்ட துணை செயலாளர் முகமது அலி பிலால், அப்துல் பாசித் மாவட்ட மருத்துவ அணி செயலாளர் குட்டி அப்துல்லா மாணவர் அணி செயலாளர் ரபீக் ராஜா ஆகியோர் முன்னலை வகித்தனர் பேச்சு போட்டியுடன் கேள்வி - பதில்கள், கிராஅத் ஓதுதல், உள்ளிட்ட தலைப்புகளில்நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தவ்ஹீத் ஜமாத்தின் பேச்சாளர் சகோதரர் சஜா அலி M.I.Sc அவர்கள் கலந்து கொண்டு *ரமலானை வரவேற்போம்* என்கிற தலைப்பில் உரையாற்றினார் மாணவ, மாணவியரின் மார்க்க கல்வியின் தேடலை ஊக்கப்படுத்தும் விதமாக அனைத்து மாணவ, மாணவியருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிளை செயலாளர் இப்ராகிம்ஷா , பொருளாளர் முஹம்மது மைதின் துணை செயலாளர்: பாரூக் மாணவரணி முகம்மது ஆதம் ஆகியோர் சிறப்பாகசெய்திருந்தனர் இறுதியாக கிளை பொருளாளர்: முஹம்மது மைதின் நன்றியுரையாற்றினார்

# மதுராந்தகத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி சி.ஐ.டி.யு விவசாய தொழிற்சங்கங்கள் பொதுவேலை நிறுத்தம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் ஒன்றிய அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்விடுதலை சிறுத்தைகள் கட்சி அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்கள் சார்பில் இன்று 2025 மின்சாரம் சட்ட மசோதாவை திரும்ப பெற கோரியும்

2014 புதிய மோட்டார் வாகன திருத்த சட்டத்தையும் மற்றும் FC கட்டணம் உயர்வை திரும்ப பெற வேண்டும் அமைப்புசாரா தொழிலாளர்களின் மாத பென்ஷன் 3000 வழங்கவேண்டும்தொழிலாளர்கள் விரோதநான்கு சட்ட தொகுப்பை திரும்ப பெற வேண்டும் விவசாய தத்தையும் விவசாயிகளையும் சீரழிக்கும் விதை மசோதா சட்டத்தை திரும்ப பெற கோரியும் என பல்வேறு கோரிக்கைகளை வைத்து அகில இந்திய பொது வேலை நிறுத்த போராட்டம் மதுராந்தகம் பாரதஸ்டேட் வங்கிஎதிரே முற்றுகையிட சென்ற பொழுது சுமார் 300க்கும் மேற்பட்ட விடுதலை சிறுத்தை கட்சியினர் மற்றும் இடதுசாரி கட்சியினர் கைது செய்யப்பட்டனர் தனியார் மண்டபதில் அடைத்து வைத்து பின்பு ஒரு மணி நேரத்தில் இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.



# தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனைத்து வாசல்களை 24 மணி நேரமும் திறக்க வேண்டும் என்று பி.ஜே.பி இளைஞரணி சார்பில் கோரிக்கை!

தூத்துக்குடி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் அனைத்து வாசல்களையும் 24 மணி நேரமும் திறந்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பா.ஜ.க தெற்கு மாவட்ட இளைஞரணி தலைவர் சக்திவேல் தலைமையில், இளைஞரணி மாவட்ட செயலாளர் முத்துக்குமார் முன்னிலையில் நிர்வாகிகள் மருத்துவக் கல்லூரி முதல்வரிடம் அளித்த மனுவில், தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் தற்போது விவிடி சிக்னல் அருகிலுள்ள பிரதான வாசல் மட்டுமே 24மணிநேரமும்செயல்படுகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் வருகை பாதிக்கப்படுகிறது. எனவே, திருச்செந்தூர் சாலை மற்றும் சுப்பையா முதலியார்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள வாசல்களையும் 24 மணி நேரமும் (அல்லது குறைந்தபட்சம் காலை 6 முதல் இரவு 9 மணி வரை) திறந்து வைக்கவேண்டும்.மகப்பேறு பிரிவில் உள்ள மின்தூக்கி தடையின்றி இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் மருத்துவமனை வளாகம் முழுவதும் தரமான குடிநீர் மற்றும் மின்விளக்கு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிகழ்வில் சமூக ஊடகப் பிரிவு மாவட்ட தலைவர் முத்து பெரியநாயகம், மகளிர் அணி மாவட்டதலைவர்வெள்ளத்தாய் அன்னராஜ், கார்த்திக் மற்றும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் சமூக வலைதளங்களில் பெண்களின் பாதுகாப்பு (ம) பெண்களின் சுகாதார பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் சமூக வலைதளங்களில் பெண்களின் பாதுகாப்பு மற்றும்பெண்களின்சுகாதார பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி தலைவர் பொறியாளர்ஜீசஸ்ராஜாஅவர்களின் வழிகாட்டுதலின்படி கல்லூரி அரங்கத்தில் வைத்து மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் தலைமை வகித்தார். கல்லூரியின் நிர்வாக இயக்குனர் பேராசிரியர் கனக பாண்டியன் முன்னிலை வகித்தார்.இந்நிகழ்ச்சியில் தென்காசிமாவட்டபெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்கள் தடுப்பு பிரிவு காவல்துறை உதவி ஆய்வாளர் ரத்னா பால் சாந்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கணினி அறிவியல் துறையில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி கலைராணி வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் துவக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கியது. தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் நிர்வாக இயக்குனர் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் இணைந்து தமிழகத்தின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் வலியுறுத்தும்விதமாகஅனைவரும் இணைந்து குத்து விளக்கு ஏற்றினர். தொடர்ந்து மூன்றாம் ஆண்டுபயிலும்செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவியல் துறை மாணவி பாத்திமா பர்வீன் நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து விளக்கி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை உரையாற்றிய கல்லூரி முதல்வர் மாணவியரின் பாதுகாப்பு மற்றும் ஒழுக்க நெறி பற்றிய விழிப்புணர்வு கல்வியுடன் இணைந்துசெல்லவேண்டியது அவசியம் என வலியுறுத்தினார். தொடர்ந்து முன்னிலை வகித்த கல்லூரி நிர்வாக இயக்குனர் பெண்களின் பாதுகாப்பும் சுகாதாரமும் சமூக முன்னேற்றத்திற்கான முக்கிய களம் என குறிப்பிட்டார்.இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட காவல்துறை உதவி ஆய்வாளர் சாந்தி தனது உரையில் சமூக வலைதளங்களின் மூலம் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக இணைய தொல்லைகள் போலி கணக்குகள் , தனி உரிமை மீறல்கள், போன்ற அபாயங்களை உணர்ந்து செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியவர் அவ்வாறான சிக்கல்களில் சிக்கினால் சட்டரீதியாக எவ்வாறு முறையிட வேண்டும் இணைய பாதுகாப்பு நடைமுறைகளை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் தெளிவாக விளக்கினார். மேலும் தென்காசி மாவட்ட சமூக நலத்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் புஷ்பராஜ் மாணவர்களுக்கானஅரசு கல்வி உதவி தொகைகள் நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு அரசு திட்டங்கள் குறித்த விளக்கம் அளித்து மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் உயர்கல்வி மற்றும் தொழில் முன்னேற்றத்தை நோக்கி முன்னேற வேண்டும் என தெரிவித்தார்.தொடர்ந்து தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி கண் மருத்துவத்துறை இணைபேராசிரியரும் துறை தலைவருமான ரீதா ஹெப்ஸி ராணி பெண்கள் எதிர் கொள்ளக்கூடிய உடல்நல சிக்கல்கள் குறித்து மருத்துவ ரீதியாக விளக்கம்அளித்தார் உடல் நல குறைபாடுகள் தோன்றும் முன் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். சீரான சுகாதார பழக்க வழக்கங்கள், உணவு முறைகள் மற்றும் முறையான மருத்துவ பரிசோதனைகள் மூலம் ஆரோக்கியத்தை பாதுகாக்கலாம் என மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார்.இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆனது மாணவ மாணவிகளுக்கு தன்னம்பிக்கை அளித்தது சிறப்பான நிகழ்வாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.இந்நிகழ்ச்சியில் பெற்றோர்கள், மாணவ, மாணவிகள், துறைத்த லைவர்கள் ,பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் தாலுகாவுக்கு உட்பட்ட கீழக்குறிச்சி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தனி வீட்டு மனை பட்டா வழங்குவதற்கான இடத்தை நேரில் ஆய்வு செய்து வட்டாட்சியர்செந்தில்வேல்ஐயாஅவர்கள்பொதுமக்களின்கோரிக்கையை விரைவில் நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்தார்



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் காமாட்சியம்மன் திருக்கோயில் திருமண மண்டபத்தில் நேற்று(12.02.2026)நடைபெற்றநலம்காக்கும்ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளைவழங்கினார்.உடன்மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சென்னிமலை பேரூராட்சித்தலைவர் ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.



உளுந்தூர்பேட்டையில் உள்ள அருள்மிகு அங்காள பரமேஸ்வரி கோவிலில் 9 நாட்கள் நடைபெறும் மாசி மாத மயான கொள்ளை திருவிழா காப்பு கட்டுதல் மற்றும் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

# அச்சிறுப்பாக்கம் அருகே பொன்னியம்மன் ஆலய திருத்தேர்விழா



செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் அடுத்துள்ள 108 தொழுப்பேடு கிராமத்தில் சிறப்புமிக்க ஸ்ரீ பொன்னியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் ஆண்டுதோறும் தை மாதத்தில் தேரோட்ட விழா நடைபெறுவது வழக்கம்.

இந்நிலையில்தற்போது தை மாதம் தேரோட்ட விழா வெகு விமர்சையாக நடந்தது. கடந்த 4ஆம் தேதி காப்பு கட்டப்பட்டு விழா தொடங்கப்பட்டு தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீப ஆராதனைகள் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்துஇன்றுமேளத்தாளங்களுடன்அலங்கார தேரில் ஸ்ரீ பொன்னியம்மன் பக்தர்களிடையே எழுந்தருளி வீதி உலா வந்தார். இதில் பொதுமக்கள் பக்தியுடன் ஓம் சக்தி ஓம் சக்தி என கோஷமிட்டவாரு தேரினைவடம்பிடித்து இழுத்தனர்.இந்ததேரோட்டம் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும்.



ஈரோடு, சேலம் உள்ளிட்ட இடங்களுக்கு சென்னையிலிருந்து மகா சிவராத்திரி, வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிட்டுள்ளது. இன்று (பிப்ரவரி 12) முதல் 14ஆம் தேதி வரை கிளாம்பாக்கத்தில் இருந்து 125 முதல் 505 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். மேலும் ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்பவும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கடலூர் மாவட்டம் வேப்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பிரகஸ்பதி தனது பணிகளைத் தொடங்கினார். முன்னதாக பணியில் இருந்த அதிகாரி மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, புதிய உதவி ஆய்வாளராக நியமிக்கப்பட்ட இவர், முறைப்படி பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். பொதுமக்களின் புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும் முன்னுரிமை அளிக்கப்படும் எனப் பொறுப்பேற்பின் போது அவர் குறிப்பிட்டார். அவருக்கு சக காவல் அதிகாரிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



, ஈரோடு வேளாளர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவிகளுக்கு இரண்டாம் கட்டமாக மடிக்கணினிகள் வழங்கும் விழா நடைபெற்றது. ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் குமரவேல் முன்னிலை வகித்தார். இவ்விழாவில் சுமார் 1597 மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் வேளாளர் கல்வி நிறுவனங்களின்செயலர்மற்றும்தாளாளர்சந்திரசேகர்,கல்லூரியின்முதல்வர்(பொறுப்பு) மற்றும் பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மடிக்கணினிகளை வழங்கி மாநகராட்சி மேயர் பேசுகையில், "ஒரு மடிக்கணினி வாங்குவதற்கு பெற்றோர்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அந்தச் சிரமத்தைத் துடைக்கும் வகையில் முதலமைச்சர் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். மாணவர்கள் இந்த மடிக்கணினியை நல்வழியில் பயன்படுத்தி, படிப்பில் முழுக் கவனம் செலுத்தி தங்களது வாழ்வில் பெரிய இலக்குகளை அடைய வேண்டும்" என்று அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர் குமரவேல் பேசுகையில், "தற்கால சூழலில் படிக்கும் மாணவிகளுக்கு மடிக்கணினி என்பது மிகவும் அவசியமான ஒன்று. அந்த அவசியத்தை உணர்ந்து கல்வியில் முன்னேற மடிக்கணினியை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும்" என மாணவியரிடையே உரையாற்றினார். விலையில்லா மடிக்கணினிகளைப் பெற்றுக்கொண்ட மாணவிகள், தங்களது கல்வி மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெகிழ்ச்சியுடன் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் அனைத்து இந்திய விவசாயிகள் சங்கம் மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் அவர்களின் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர் தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G.தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி "ஈரோடு மாவட்டத்தின் நீரோடும் பாதையின் சீர்மிகு அடையாளம் விவசாயிகளின் உற்ற வேளாண் சார் பொருட்கள் விற்பனையகமாம் "பாண்டியன் ஏஜென்சி மற்றும் பாரி பைப் டிரேடர்ஸ்" நிர்வாக இயக்குனருமான இரா.எல்லாளன் அவர் தம் பல்வேறு விவசாயம் சார்ந்த சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "தங்கமகன்" எனும் சிறப்பு விருது மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.



தமிழகத்தில் நியாய விலை கடைகளுக்கு தனி துறை அமைக்க வேண்டும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் அதற்காக அமைக்கப்பட்ட தனிக்குழு பரிந்துரையை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் உள்ள அனைத்து நியாய விலை கடைகளிலும் கழிவறை வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் நியாய விலை கடை மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் உணவுப் பொருட்களை பொட்டலங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் நியாய விலை கடை பணியாளர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு நியாய விலைகடைபணியாளர்சங்கத்தின்சார்பில்மாவட்டதலைவர்ராஜகோபால்தலைமையில் கண்டனஆர்ப்பாட்டம்நடைபெற்றதுஇதில்ஏராளமானநியாயவிலைகடைபணியாளர்கள் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு கோரிக்கைகளை வலியுறுத்தி முழுக்கங்களை எழுப்பினர்.

## மகளிர் குழு கடன் தொகையில் லட்சக்கணக்கில் மோசடி: வேப்பூர் அருகே திட்ட அலுவலகத்தை முற்றுகையிட்டு பெண்கள் போராட்டம்

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே நிராமணி கிராமத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தலா 1,06,000 கடன் தொகையில், ஒரு நபருக்கு 70,000 மட்டுமே வழங்கிவிட்டு எஞ்சிய தொகையை குழு கணக்காளர் மோசடி செய்ததாகப் புகார் எழுந்துள்ளது.

இது தொடர்பாக நல்லூரில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, உரிய ஆவணங்களை வழங்க அதிகாரிகள் மறுத்ததாகக் கூறி பாதிக்கப்பட்ட பெண்கள் திடீரென அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

மோசடி செய்யப்பட்ட பல லட்ச ரூபாயை மீட்டுத் தரக்கோரியும், சம்பந்தப்பட்ட கணக்காளர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பெண்கள் அதிகாரிகளுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



## தூத்துக்குடி தாலுகா அலுவலகத்தில் குடும்ப அட்டை தாரர்களின் கைரேகை விழாதவர்களுக்கு சிறப்பு முகாமை அமைச்சர் கீதாஜீவன் துவக்கி வைத்தார்





தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாலுகா பகுதியில் உள்ள நியாயவிலை கடைகளில் பொருட்கள் வாங்கும் குடும்ப அட்டை தாரர்களின் கைரேகை மற்றும் கருவிழி பதிவு சரியாக ிழாதர்வர்களுக்கு தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமை வடக்கு மாவட்ட திமுகசெயலாளரும்சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்கினார்.

தொடர்ந்து முகாமில் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: மூத்தோர்கள் முதியவர்கள் நலனை கருத்தில் கொண்டு இந்த முகாம் நடத்தப்படுகிறது. தமிழர் திருநாளான பொங்கல் திருநாளையொட்டி தமிழக முதலமைச்சர் முக.ஸ்டாலின் மூவாயிரம் ரொக்கத்துடன் பொங்கல் தொகுப்பு வழங்குவதற்கு உத்தரவு பிறப்பித்தார் நமது தாலூகா பகுதிக் குட்பட்ட சட்டமன்ற தொகுதியில் உள்ள மூத்தோர்கள் முதியோர்கள் ரேசன் கடைகளில் கைரேகைகள் கருவிழி பதிவு சரியாக விழவில்லை என்று பொதுமக்கள் எனக்கு தொலைபேசி மூலம் பலரும் தெரிவித்தனர் அதை அந்த சமயத்தில் நியாய விலை கடை மூலம் தீர்வு காணப்பட்டு 3000 பொங்கல் தொகுப்புகள் வழங்கப்பட்டது. அதற்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த முகாம் நடைபெறுகிறது. முதியவர்கள் சார்பில் யார் பொருட்கள் வாங்க செல்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக தங்களது ஆதார் அட்டை கொடுத்து விண்ணப்பித்தால் அதற்கான அரசானை உங்களுக்கு வழங்கப்படும். அதன் மூலம் தடையின்றி பொருட்கள் வாங்கி கொள்ளலாம் இந்த முகாமில் 150 போ்கள் பலனடைகிறார்கள். 2021 முதல் 2026 வரை புதிய ரேஷன் கார்டு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை நிவர்த்தி செய்வதற்கென்று இதுவரை 13 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. அதன்மூலம் 19802 பேருக்கு புதிய ரேஷன் கார்டு வழங்கப்பட்டு அவர்களுக்கும் பொங்கல் தொகுப்பு பொருட்களுடன் பணம் வழங்கப்பட்டுள்ளது. அதே போல் மகளிர் உரிமைத்தொகை விண்ணப்பத்தின் மூலம் வழங்கியுள்ளோம். முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டை பெறுவதற்கென்று 30 நாட்கள் நடைபெற்ற முகாமில் 87ஆயிரத்து 648 பேர் காப்பீட்டு அட்டை பெற்று பலனடைந்து உள்ளனர்.

முதலமைச்சரின் இந்த காப்பீட்டு திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒரு லட்சத்து 20ஆயிரம் வருமானம் உள்ளவர்கள் 5 லட்சம் வரை பலனடைந்து கொள்ளலாம். இன்னும் சிலர் வாங்காத நிலையில் என்னை தொடர்பு கொண்டு கேட்கின்றனர். ஆட்சியர் அலுவலகத்தில் முதல் தளத்தில் இதற்கான அலுவலகம் இருக்கிறது. அங்கு சென்று எல்லோரும் பெற்றுக்கொள்ளலாம். தொழிலாளர் நலத்துறை மூலம் நடைபெற்ற முகாமில் 2700 பேர் அதில் உறுப்பினராக இணைந்து அடையாள அட்டை பெற்றுள்ளனர். கணினி பட்டா இதுவரை 800 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு சிலருக்கு வரைமுறைப்படுத்தி வழங்கப்படவுள்ளது. இந்த முதியவர்களுக்கான முகாமில் கலந்து கொள்ள இயலாதவர்களின் குடிமைபொருள் வட்டாட்சியரை நேரில் அனுகி ஆதார் அடையாள அட்டையுடன் விண்ணப்பித்தால் உடனடியாக உங்களுக்கு அரசானை வழங்கப்படும் இதை மற்றவர்களுக்கும் பொதுமக்கள் தெரிவித்து பலனடைந்து கொள்ள வேண்டும். இந்தமுகாம் நடைபெறுதற்கு முழுமையாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு பணியாற்றிய தாசில்தார்கள் ஞான்ராஜ் திருமணிஸ்டாலின் ஆகியோரை மனதார பாராட்டுகிறேன். மக்கள் நலன் தான் முக்கியம் என்று உங்களுக்காக நாங்கள் பணியாற்றுகிறோம் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் தாசில்தார்கள் ஞான்ராஜ், திருமணிஸ்டாலின், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், மேகநாதன், ஜெயக்குமார், வட்டச்செயலாளர்கள் செந்தில்குமார், வசந்தி பால்பாண்டி, சேகர், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரவி, விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அன்பழகன், சிறுபான்மை அணி துணை அமைப்பாளர்கள் நிக்கோலாஸ்மணி, மாணவரணி துணை அமைப்பாளர் கோகுல்நாத், கவுன்சிலர்கள் விஜயகுமார், ஆறுமுகம், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சூர்யா, அவைத்தலைவர் ராஜ்மோகன், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர், கார்த்திக்கேயன், அந்தோணிராஜ், துணைச்செயலாளர் சந்திரசேகர், பெருமாள்கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், மற்றும் மணி உள்பட அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இரண்டு நாள் கல்வி சுற்றுலா முடித்து வந்த பர்கூர் மலைப்பகுதியை சேர்ந்த கொங்காடை, அக்னி பாபி, ஓசூர், ஆலனை ஆகிய கிராமங்களில் இருந்து பள்ளி இடைநிற்ற 22 பழங்குடி மாணவ மாணவியர்களுடன் பள்ளிப்படிப்பை மீண்டும் தொடர ஊக்குவித்து கலந்துரையாடினார்





ஈரோடு மாவட்டம், ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (11.02.2026) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இரண்டு நாள் கல்வி சுற்றுலா முடித்து வந்த பர்கூர் மலைப்பகுதியை சேர்ந்த கொங்காடை, அக்னி பாபி, ஓசூர், ஆலனை ஆகிய கிராமங்களில் இருந்து பள்ளிப்படிப்பை இடைநிற்ற 22 மாணவ மாணவியர்களுடன் பள்ளிப்படிப்பை மீண்டும் தொடர ஊக்குவித்து கலந்துரையாடினார்.

பர்கூர் மலைப்பகுதியை சேர்ந்த கொங்காடை, அக்னிபாபி, ஓசூர், ஆலனை ஆகிய கிராமங்களில் இருந்து பள்ளிப்படிப்பை இடைநிற்ற 22 பழங்குடி குழந்தைகளுக்கு இரண்டு நாள் கல்வி சுற்றுலா சத்தியமங்கலம் ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி, என்.ஜி. ஓ. கிளப், சுடர் தொண்டு நிறுவனம் ஆகிய இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இம்மாணவர்கள் முதல் நாள் வேளாளர் கல்லூரி வளாகத்தில் பல்வேறு துறைகளை நேரடியாக சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டனர். இரவு வேளாளர் கல்லூரி விடுதியில் தங்கினர். இரண்டாம் நாளில் கதைக்களம், ஸ்டெம் பார்க் ஆகிய பகுதிகளை நேரடியாக சென்று பார்வையிட்டனர். நிறைவாக மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள துறைகளை பார்வையிட்டார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 22 பழங்குடி குழந்தைகளுக்குடன் கலந்துரையாடி கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி அவர்கள் மீண்டும் பள்ளிப்படிப்பை தொடர வேண்டுமென தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி, சுடர் அமைப்பின் இயக்குனர் எஸ்.சி.நடராஜ், ஈரோடு வேளாளர் கல்லூரி பழங்குடியினர் நல மைய ஒருங்கிணைப்பாளர் ஆங்கிலத் துறை தலைவர் வனிதா, தமிழ் துறை தலைவர் சுமதி, வரலாற்று துறை தலைவர் கவிதா உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எமரால்டு ஜீவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் நிறுவனம் சி.எஸ்.ஆர். திட்டம் மூலம் குருடம்பாளையம் ஊராட்சிக்கு தூய்மை பணிக்காக ரூ.8 லட்சம் மதிப்பில் டிராக்டர் வழங்கினர்

கோவை தொப்பம்பட்டி பிரிவு அருகே செயல்பட்டு வரும் எமரால்டு ஜீவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் சமூக பொருப்புணர்வு திட்டத்தின் மூலம் குருடம்பாளையம் ஊராட்சியில் தூய்மை பணிக்காக ரூபாய் 8 லட்சம் மதிப்பிலான டிராக்டர் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



கோவை தொப்பம்பட்டி பிரிவு பகுதியில் செயல்பட்டு வருகிறது எமரால்டு ஜுவல் இண்டஸ்ட்ரி இந்தியாலிமிடெட் நிறுவனம். இந்நிறுவனத்தின் சமூக பொருப்புணர்வு திட்டத்தின் மூலம் கிரிஷா அறக்கட்டளையுடன் இணைந்து பல்வேறு சமூக பணிகள் மற்றும் நலத்திட்டங்களை செய்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக குருடம்பாளையம் ஊராட்சியில் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்காக எமரால்டு ஜுவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் சி எஸ் ஆர் என்னும் சமூக பொருப்புணர்வு திட்டத்தின் மூலம் ரூபாய் 8 லட்சம் மதிப்பிலான டிராக்டர் வழங்கப்பட்டது. இதனை ஊராட்சிக்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சி இன்று எமரால்டு நிறுவனத்தில் நடைபெற்றது.

இதில் எமரால்டு ஜுவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் இயக்குனர் விஷ்ணு பிரசாத் மற்றும் அறங்காவலர் கருணாகரன் ஆகியோர் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜென்கின், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோதிமணி மற்றும் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்திக், குருடம்பாளையம் ஊராட்சி செயலர் சண்முகராஜ் ஆகியோரிடன் டிராக்ட்டரின் சாவியை ஒப்படைத்தனர்.

தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் எமராலடு நிறுவன நிர்வாகத்தின் சார்பாக தினேஷ்குமார், இரா சக்திவேல், மு ரமேஷ் குமார் மற்றும் சின்னதம்பி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம்; எஸ்.பி. பங்கேற்பு



தூத்துக்குடியில் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் சிலம்பரசன் தலைமையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம் நடைபெற்றது

தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் உத்தரவின்படி ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையிலும் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றது.

அதன்படி நேற்று மாவட்ட காவல்கண்காணிப்பாளர் நை. சிலம்பரசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 32 மனுதாரர்கள் தங்கள் குறைகளை நேரடியாக தெரிவித்து புகார் மனு அளித்தனர். பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



# 8 ஊராட்சிகளில் புதிய குடிநீர் தொட்டிகளுக்கான பணிகளை அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்தார்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சருமான சி.வெ. கணேசன் அவர்கள் நேற்று நேற்று (12-02-2026) தனது தொகுதிக்குட்பட்ட மங்களூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் தீவிர சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தார்.

வினாயநந்தல் ஊராட்சியில் புதிய மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி தனது பயணத்தைத் தொடங்கிய அமைச்சர், அதனைத் தொடர்ந்து ரெட்டாக்குறிச்சி ஊராட்சியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் ஆர்.ஓ நிலையத்தைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து மங்களூர், மா.புதூர்,லக்கூர்,சிறுகரம்பலூர், கல்லூர் மற்றும் ஆவட்டி ஆகிய ஊராட்சிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் புதிய மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் அமைப்பதற்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர், இப்பணிகளைத்தரமாகவும் விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வுகளின் போது பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட அமைச்சர், கிராமப்புற மேம்பாட்டிற்காக அரசு முன்னெடுத்து வரும் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

வேப்பூர் வருவாய் வட்டாட்சியர் செந்தில்வேல், மங்களூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சண்முகசிகாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் செங்குட்டுவன், அடரி சின்னசாமி, பட்டூர் அமிர்தலிங்கம், மாவட்ட பிரதிநிதி குமணன், மங்களூர் திருவள்ளுவன் மற்றும் அரசு அலுவலர்கள், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்குதமிழ்நாடு அரசு வழங்கும் தூய்மை பணியாளர்களுக்கான நலவாரிய அட்டை வழங்கும் விழா ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் வைத்து நடைபெற்றது.இந்த விழாவில் ஆலங்குளம் யூனியன் சேர்மன் திவ்யா மணிகண்டன் கலந்து கொண்டு 139 தூய்மை பணியாளர்களுக்கு நல வாரிய அட்டை வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் அலிஸ் தாயம்மாள்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், ஊர்நல அலுவலர் ராமசாமி, கல்யாண ராமசுப்பிரமணியன் வட்டார சுகாதார உறுப்பினர் நாகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# என்எல்சி நிறுவனத்தில் ரூ.442 கோடி முறைகேடு: சிபிஐ விசாரணை நடத்த ஐகோர்ட் உத்தரவு

என்.எல்.சி. நிறுவனத்தில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கியதில் நடந்த 442 கோடி ரூபாய் முறைகேடு குறித்து புகார்தாரரிடம் ஆதாரங்களைப் பெற்று விசாரணை நடத்த சிபிஐ-க்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில்,பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்கியதில், 442 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்து உள்ளதாகக் கூறி, கடலூரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் சிபிஐ-யிடம் புகார் அளித்துள்ளார்.



எந்த நடவடிக்கையும் எடுக்காததால், தனது புகார் மீது வழக்குப்பதிவு செய்ய சிபிஐ-க்கு உத்தரவிடக் கோரி மணிகண்டன் சென்னை உயர் நீதிமன்ற த்தில் மனுத்தாக்கல் செய்தார். அதில், சாம்பல் விற்பனை, ஒப்பந்தவிதிகளுக்குமாறாக, காலாவதியான டெண்டர்களின் காலத்தை நீட்டித்தது; 73,000 டன் அளவுக்கு செம்மண்ணை சட்டவிரோதமாக அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் என்.எல்.சி. அதிகாரி கள் முறைகேடு களில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியிருந்தார். இந்த மனு நீதிபதி எம். நிர்மல் குமார் முன் விசாரணைக்கு வந்த போது, புகார்தாரர் தனது புகார் தொடர்பான முழு ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், விசாரணைக்கு அழைத்தும் ஆஜராகவில்லை என்றும் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சா ட்டுக்களுக்கு முகாந்திரம் இல்லாமல், நேரடியாக வழக்குப்பதிவு செய்ய முடியாது எனத் தெரிவித்த நீதிபதி, என்.எல்.சி. உயர் அதிகாரிகளுக்கு எதிரான புகாருக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதேபோல, சிபிஐ விசாரணைக்கு அழைத்தால் ஆஜராகி, ஆதாரங்களை சமர்ப்பித்து,விசாரணை க்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதி, ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி, சட்டப்படி நடவடிக்கை எடுக்க சிபிஐ-க்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் காமாட்சியம்மன் திருக்கோயில் திருமண மண்டபத்தில் நேற்று(12.02.2026)நடைபெற்றநலம்காக்கும்ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளைவழங்கினார்.உடன்மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சென்னிமலை பேரூராட்சித்தலைவர் ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.

## மொடக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும்

# 213 கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளைஅமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில்(12.02.2026) நேற்று வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி 213 கல்லூரி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்தாவது தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையா ட்டுத்துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியுள்ளார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, அரசு சிக்கய்ய கலைமற்றும்அறிவியல்கல்லூரியில் சிறு விளையாட்டு அரங்கம், மிகப்பெரிய நூலகம், போட்டித்தேர்வுகளுக்கு பயில பயிற்சி மையம் ஆகியவையும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை மாணவ,மாணவியர்கள் பயன்படுத்திக் கொண்டு ஆசிரியர்கள் பெருமைப்படும் அளவில் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அதன்படி நேற்றைய தினம் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மொடக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 142 மாணவர்கள் மற்றும் 71 மாணவியர்கள் என மொத்தம் 213 கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி. சரஸ்வதி, மொடக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர். ராஜேந்திரன், வணிகவியல் துறை தலைவர் முனைவர் கல்யாணி, ஒருங்கிணைப்பாளர்கள் விசாலாட்சி,தமிழ்ச்செல்வன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (12.02.2026) ஈரோடு மாவட்டம், சென்னிமலை, கணுவாய், அம்மன் காட்டேஜ்ஜில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டாவினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, சென்னிமலை பேரூராட்சித்தலைவர் ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (12.02.2026) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிபிடாரியூர் நீருந்து நிலையத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் ஊரக குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் குடிநீர் திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சென்னிமலை பேரூராட்சித்தலைவர் ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.



இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் கேந்திரா ஈரோடு மாவட்டம் சார்பாக " இளையோர் தலைமைத்துவ பண்புகள் பயிற்சி முகாம் " ஈரோடு மாநகர் ரங்கம்பாளையத்தில் உள்ள டாக்டர்.ஆர்.ஏ.என். எம் கலை அறிவியல் கல்லூரியில் 9.2.2026 முதல் 11.2.2026 வரை மூன்று நாட்கள் நடைபெற்றன. இதில் முதல் நாள் தொடக்க விழாவில் கீர்த்தனா வரவேற்புரை ஆற்றினார். தலைமை இயக்குனர் டாக்டர்.பழனியப்பன் முன்னிலை அரசு தரப்பு வழக்கறிஞர் திருமலை மற்றும் முன்னாள் அரசு தரப்பு வழக்கறிஞர் ராஜா,முதல்வர் நளினி மற்றும் நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உடற்கல்வி இயக்குனர், தேவகாந்தன் மற்றும் ஹார்ட்புல்நெஸ் இன்ஸ்டிடியூட் ஈரோடு DLO மகாதேவன்,கலந்து கொண்டு துவக்கி வைத்தனர். இரண்டாம் நாள் கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் டாக்டர் பிரபு, கீதாஞ்சலி. சமூக சேவகர்கள் திரு.மாயவன் வெங்கடேஷ் மற்றும் பேபி, நிதி ஆலோசகர்குருராஜன்.சாய்ராஜ்கல்விஅறக்கட்டளைவரதராஜன்.பவிஹெல்த்லைஃப்பவுண்டேசன்கோபாலகிருஷ்ணன் கலந்து கொண்டனர். மூன்றாம் நாள் பயிற்சி முகாமிற்கு வருகை தந்த அரசு தரப்பு வழக்கறிஞர் பரணிதரன் அவர்கள், ஈரோடு சட்டக் கல்லூரி முதல்வர் முனைவர்.அகபர் அலி பெய்க் அவர்கள், மற்றும் திரு. ரகுநாத் நிர்வாக இயக்குநர் கான்ஃபுட் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட் மனோகரன் செயல் தலைவர் DSR EV மொபிலிட்டி. கலந்து கொண்டு சிறப்பித்தனர் மேலும் பயிற்சி முகாம் சிறப்பாக செயல்பட்ட 40 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தனர். இம்மூன்று நாள் பயிற்சி முகாமில் இளையோர்களுக்கு தலைமைத்துவ பண்புகள், தியானம், மாதிரி பாராளுமன்றம் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN